முதன்மை மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

**முன்னிலை : திருமதி. ஏ. முத்துசாரதா, B.L., P.G.D.P.M.**
**முதன்மை மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்**

2024 ம் ஆண்டு ஜூன் திங்கள் 7 ம் நாள் வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண்.163/2019–ல் இ.ம.எண். 2 /2022**

1. திருமதி. அருள்விமலாமேரி
2. மைனர், ரமேல்அடோணி

(மைனர்.2 ம் மனுதாரர்/2 ம் வாதி மேற்படியாரின் தாயாரும் அடுத்த சிநேகதியும், பாதுகாவலருமான 1 ம் மனுதார்/1 ம் வாதி மூலம்)

.... மனுதாரர்கள் /வாதிகள்

/ எ தி ர் /

1. திரு. ராய் சகாயராஜ்
2. திருமதி. இன்பெண்டா ஜீசஸ் மேரி
3. திருமதி. சலேத்
4. திரு. வி. சரவணன்

.... எதிர்மனுதார்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு என் முன்னர் 29.4.2024 ம் நாளன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு B. வாசுதேவன் அவர்களும், 1 முதல் 3 எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.மரியசெல்வராஜ், அவர்களும் ஆஜராகியும், 4 ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் அழைத்தும் ஆஜரில்லாததால் தோன்றாத் தரப்பினராகக் கருதப்பட்டும், மனு உரை, எதிருரை மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இன்று வரை

இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இம்மன்றத்தால் பிறப்பிக்கப்படும் :

<u>உத்தரவு</u>

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை குறியீடு செய்ய ஏற்றுக்கொள்ள உத்தரவிடக்கோரி சி.பி.சி கட்டளை 7 விதி 14 மற்றும் பிரிவு 151–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் பின்வருமாறு</u> :–

மனுதார்கள் அசல் வழக்கில் வாதிகள் ஆவார். மனுதாரர் வழக்கில் கண்ட சொத்தில் தங்களுக்குரிய பாதி பங்கு பாகத்தை பிரித்துக் கொடுக்க கோரியும், மற்றும் மாற்றுப்பரிகாரமாக 1ம் மனுதாரரின் கணவர் வங்கி கணக்கில் இருந்து அவருடைய ஏ.டி.எம் கார்டை பயன்படுத்தி 1ம் பிரதிவாதி எடுத்த பணம் ரூ. 28,70,000/– செலுத்தி வைக்க உத்தரவு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு சம்பந்தப்பட்ட சில ஆவணங்கள் தற்போது கிடைக்கப் பெற்றுள்ளது. கூடுதல் ஆவணங்களை ஏற்றுக்கொள்ளக்கூறி இ.ம.எண்.1/2022 தாக்கல் செய்துள்ளார், மேற்படி மனுவின் 1ம் பிரதிவாதி ராய் சகாயராஜு கைபேசி மூலம் நடந்த உரையாடல் 1ம்வாதியின் கணவரிடம் கோடெக் மகேந்திரா வங்கியிலிருந்து ஏ.டி.எம் கார்டை பயன்படுத்தி பணத்தை எடுத்ததை தன்னுடைய செல்போனில் உரையாடலை பதிவு செய்து, பதிவு செய்யப்பட்ட செல்போனை மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட

ஆவணங்களுடன் 10 வது ஆவணமாக தாக்கல் செய்துள்ளார். ஆனால் சாட்சியச் சட்டம் 65பி –ன் படி இரண்டாவது தர சாட்சியமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறி மேற்படி செல்போன் உரையாடல் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை பட்டியலில் இருந்து நீக்கிக் கொடுக்கும்படி இந்நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேற்படி இ.ம.எண்.1/2022 ல் 10 வது ஆவணத்தை குறிப்பை அடித்து மீண்டும் மனுவை தாக்கல் செய்துள்ளார். அதன் பின்னிட்டு சட்ட நிலையை பரிசிலித்த போது மாண்புமிகு உச்ச நீதிமன்ற ஏ.ஐ.ஆர். 2015 பக்கம் 180 பாரா 24 ல் உரையாடல் பதிவு செய்யப்பட்ட செல்போனை அப்படியே நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் அது சாட்சியச் சட்டம் 62 ன் படி முதல்நிலை சாட்சியமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்த ஆவணங்கள் மனுதாரர் வழக்கை நிரூபிப்பதற்கு அவசியமாக உள்ளது. எனவே மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

3. <u>1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:–</u>

மனுதாரர் வழக்கை தாக்கல் செய்யும்போது இந்த மின்னணு பதிவை தாக்கல் செய்யாததற்காக தவறான விளக்கத்தை சமர்பித்துள்ளார். மேற்படி மனுவில் மொபைல் போனில் பதிவு செய்யப்பட்ட அழைப்புப் பதிவின் தேதி மற்றும் நேரத்தை மனுதாரர் குறிப்பிடவில்லை. மனுதாரர் கோரியுள்ள கையடக்கத் தொலைபேசியின் உரிமையாளர் அவரே என்றாலும் அவர் மொபைல் போன் மீது உரிமை கோருவதை ஆதரிக்கும் எந்த ஆவணத்தையும் சமர்பிக்கவில்லை.

மேலும் மனுதாரர் கீழ்கண்ட P.V. / vs / P.K. Basheer (2014 10 S C C 473) என்ற உச்சநீதிமன்றத் தீர்ப்பை மேற்கோள் காட்டியுள்ளார்,

*"....if an electronic record as such is used as primary evidence under Section 62 of the Evidence Act, the same is admissible in evidence without compliance with the conditions in Section 65-B of the Evidence Act."*

மேற்படி எதிர்மனுதாரர் கீழ்கண்ட அர்ஜுன் பண்டித்ராவ் கோட்கர் வி கைலாஷ் குஷன்ராவ் கோர்ண்டியல், (2020 எஸ்.சி.சி ஆன்லைன் எஸ்.சி 571) என்ற உச்சநீதிமன்ற தீர்ப்பை மேற்கோள் காட்டியுள்ளார்,

*"....if an electronic record as such is used as primary evidence under Section 62 of the Evidence Act..." is to be read without the words "under Section 62 of the Evidence Act..."*

அழைப்புப் பதிவைக் கொண்ட கையடக்கத் தொலைபேசியை நீதிமன்றத்தின் முன் சமர்பிப்பதன் மூலம் ஆவணத்தை ஆதாரமாக ஏற்றுக்கொள்வதற்கு முதன்மை ஆதாரம் போதுமானதாக இருக்காது, மேற்படி அழைப்புப் பதிவுகள் ஆதாரமாக நம்பப்படும்போது அழைப்பு குரல் பதிவில் உள்ள குரலை தனித்தனியாக அடையாளம் காணவேண்டும் என்றும், இதற்கு முன் அழைப்பு குரல் பதிவுகளின் நம்பகத்தன்மை மற்றும் உண்மைத்தன்மையை நிரூபிக்க சோதனை கோரப்பட்ட அழைப்பின் கோப்பு இருப்பிடத்தை மனுதாரர் குறிப்பிடவில்லை, ஒரு மின்னணு சாதனத்தில் கோப்பு இருப்பிடத்தை குறிப்பிடுவது அவசியம். எனவே அதை ஆவணமாக ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே மனுதாரரின் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

5) இரு தரப்பிலும் சாட்சியச், சான்றாவணங்கள் ஏதும் முன் வைக்கப்படவில்லை.

6) **பிரச்சனைக்குரிய தீர்வு**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் அசல் வழக்கு எண் 163/2019 பாகப்பிரிவினைக்காக தாக்கல் செய்திருப்பதாகவும், அவ்வழக்கில் மாற்றுப் பரிகாரமாக 1ம் மனுதாரின் கணவரின் வங்கிக் கணக்கிலிருந்து ஏடிஎம் கார்டை பயன்படுத்தி 1ம் எதிர்மனுதாரர் 1ம்பிரதிவாதி ரூ.28,70,000/-யை எடுத்ததை திரும்பி செலுத்தி வைக்க கோரியும் தாக்கல் செய்துள்ளதாகவும், தற்போதுதான் இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள 1ம் மனுதாரரின் கணவரின் வங்கிக் கணக்கிலிருந்து ஏ.டி.எம் கார்டை பயன்படுத்தி 1ம் எதிர்மனுதாரர் பணம் எடுத்ததாக செல்போன் மூலம் பேசிய பதிவு செய்யப்பட்ட உரையாடல் கொண்ட செல்போன் ஒன்று அசல் வழக்குடன் ஆவணமாக தாக்கல் செய்ய இயலாமல் விடுபட்டு போய்விட்டதாகவும், இ.ம.எண் 1/2022-ல் 10 வது ஆவணமாக தாக்கல் செய்திருந்ததை ஏற்க இயலாது என திருப்பப்பட்டதால் தற்போது சாட்சிய சட்டம் பிரிவு 62-ன்படி கூடுதல் ஆவணமாக ஏற்கக் கோரி இம்மனுவுடன் தாக்கல் செய்வதாகவும், இந்த ஆவணம் அசல் வழக்கில் தங்கள் தரப்பில் வழக்கை நிரூபிக்க மிகவும் அவசியமான ஆவணமாக இருப்பதால், அவ்வாவணத்தை

அசல் வழக்கில் கூடுதல் ஆவணமாக ஏற்றுக்கொள்ள இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடவேண்டும் என்று எடுத்துரைக்கப்பட்டது.

7) எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் குறிப்பிடும் செல்போன் தொடர்பு எண், செல்போன் யாருக்குப் பாத்தியப்பட்டது, எந்தத் தேதியில் தொடர்பு கொண்டு பேசடப்பட்டது ஆகியவை குறிப்பிடப்படவில்லை என்றும், வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில் கைவசம் இருந்த செல்போன் ஏன் ஆவணமாக தாக்கல் செய்யப்படவில்லை என்பதற்கு விளக்கமளிக்கப்படவில்லை என்றும், சாட்சியச் சட்டம் பிரிவு 62–ன் கீழ் முதன்மை சாட்சியமாக ஏற்றுக்கொண்டாலும் கூட மனுதாரர்கள் தரப்பில் குறிப்பிடும் A.T.M. Card எண், பணம் எடுக்கப்பட்டதாக சொல்லப்படும் தேதி மற்றும் நேரம் ஆகியவை மனுவில் குறிப்பிடப்படடவில்லை என்றும், தொலைபேசி உரையாடலின் நபரை அடையாளம் காண Voice Test report பெற்று தாக்கல் செய்யப்படவில்லை என்றும், எந்த வகையில் இந்த ஆவணம் வழக்கிற்கு பொருந்தக்கூடியது என்று மனுதார்கள் தரப்பில் எடுத்துரைக்கப்படவில்லை என்றும், எனவே, மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று வாதிடப்பட்டது.

8) இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

9) மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தை அசல் வழக்கில் கூடுதல் ஆவணமாக ஏற்றுக்கொள்ளக்கோரி இம்மனு தாக்கல்

செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் மாற்றுப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தை பரிசீலிக்கும்போது மனுவில் குறிப்பிட்டுள்ள செல்போனில் 1ம் மனுதாரரிடம் 1ம் எதிர்மனுதாரர் ஏ.டி.எம். கார்டு மூலமாக பணம் எடுத்துக்கொண்டதாக தெரிவித்ததை செல்போனில் பதிவு செய்யப்பட்டிருப்பது வழக்கில் நிரூபிக்க தேவைப்படுவதாகவும், எனவே கூடுதல் ஆவணமாக அவசியமாக ஏற்கவேண்டுமென்று கூறப்படுவதை காண்கின்றபோது மேற்படி ஏ.டி.எம். கார்டின் எண் குறிப்பிடப்படவில்லை. உண்மையில், 1ம் மனுதாரரிடம் 1ம் எதிர்மனுதாரர்தான் செல்போன் மூலமாக உரையாடலை நிகழ்த்தினார் என்பதற்கும், எந்தத் தேதியில் எந்த பதிவு எண் கொண்ட செல்போன் மூலமாக பேசினார் என்றும், அந்த செல்போன் யாருக்குப் பாத்தியப்பட்டது என்றும், பேசிய நபர் 1ம் எதிர்மனுதாரர்தான் என்பதற்கும் மெய்ப்பிக்கதக்க வகையில் எவ்வித சான்றும் இல்லாத நிலையில் இந்த ஆவணம் எந்த வகையில் மனுதாரர்களுக்கு அசல் வழக்கினை நிரூபிக்க பயனுள்ளதாக அமையும் என்றும் மனுதாரர்கள் தரப்பில் விரிவாக சொல்லப்படாத நிலையிலும், மேலும், வழக்கு தாக்கல் செய்யும் காலத்திலேயே மனுதாரர்கள் கைவசம் வைத்திருந்ததாக சொல்லப்படும் செல்போன் அப்பொழுதே தாக்கல் செய்யாமல் தற்போது கூடுதல் ஆவணமாக ஏற்கக் கோருவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இல்லை என்பதாலும்,

மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ள பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என தீர்மானித்து அந்த வகையில் இம்மனு அனுமதிக்கத்தக்கதல்ல என்று இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

**முடிவில்** இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, கையொப்பமிடப்பட்டு, 2024 ம் நாளன்று ஜுன் திங்கள் 7 ம் நாளாகிய இன்று திறந்த அவையில் அவையறியப் பகரப்பட்டது.

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
திண்டுக்கல்.

இரு தரப்பிலும் சாட்சியச், சான்றாவணம் : ஏதுமில்லை

**மு மா நீ,**
திண்டுக்கல்.

முதன்மை மாவட்ட நீதிமன்றம்
திண்டுக்கல்
அ.வ.எண் 163/2019-ல்
இ.ம.எண் 2/2022
நாள் 07.06.2024
அசல்/நகல் உத்தரவு